டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.10.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 108 - Madurai | Online Edition

## வாரணாசியில் நவம்பர் 28 முதல் 30 வரை

# 13வது தேசிய விதை மாநாடு

புது தில்லி, அக்.24

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், வரும் நவம்பர் 28 முதல் 30ம் தேதி வரை, உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் 13-வது தேசிய விதை மாநாட்டை நடத்துகிறது. சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம், தெற்காசிய பிராந்திய மையம் மற்றும் தேசிய விதை ஆராய்ச்சி, பயிற்சி மையம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய விதை மாநாடானது இத்துறை தொடர்பானவர்களை ஒன்றிணைத்து, மாற்றத்தை ஏற்படுத்தும் தீர்வுகளை ஆராய் வதற்கும், தற்போது துறை எதிர்கொள்ளும் கடும் சவால்களை எதிர்கொள்வதற்கும் ஒரு பொதுவான தளத்தை வழங்கும்.

தேசிய விதை மாநாட்டின் பங்கைச் சுட்டிக் காட்டிய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறையின் கூடுதல் செயலாளர் சுபா தாக்கூர், ‘விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், கோடிக் கணக்கான மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உயர்தரமான, பருவநிலை மாறுதலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்கின்ற மற்றும் சத்தான விதைகள், மேம்பட்ட சாகுபடிகளுடன் கிடைப்பது என்பது முன்னெப்போதையும் விட முக்கியமானது என்று தெரிவித்தார்.

இந்த மாநாடு, விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பது மற்றும் நாட்டின் விவசாயம் வலுவாகவும் நிலையானதாகவும் இருப்பதை உறுதி செய்வது ஆகியவற்றுக்கான ஒரு தளமாக செயல்படும்.

இந்நிகழ்வு புதுமையான தீர்வுகளை ஊக்குவிப்பதோடு, விதைத் துறை வளர்ச்சியை மேம்படுத்தும் கூட்டாண்மைகளை ஊக்குவிக்கும்.

ஆர்வமுள்ளவர்கள், மேல் விவரங்களுக்கு இணையதளத்தைப் பார்வையிடலாம் மற்றும் பதிவு செய்யலாம். இணையதள முகவரி : **https://13thnscindia2024.com/index.html.**

# கிராமப்புற பெண்களை தொழில் முனைவோராக்கும் முயற்சி

## காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் முன்னெடுப்பு




திருச்சி, அக்.24

தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (NRCB), திருச்சிராப்பள்ளி மற்றும் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC), சென்னை ஆகியவை இணைந்து 'வளம் தரும் வாழை கழிவுகள் : வாழை நார் சார்ந்த பொருட்கள்' குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை தேசிய வாழை ஆராய்ச்சி மையம், திருச்சிராப்பள்ளியில் 23.10.24 அன்று நடத்தியது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது கிராமப்புற மக்களுக்கு வாழை நார் பிரித்தெடுப்பதற்கான பயிற்சியை அளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கிராமோத்யோக் விகாஸ் யோஜனா (GVY) திட்டமானது தொழில் நுட்ப நவீனமயமாக்கல், பயிற்சி மற்றும் பிற ஆதரவு சேவைகள் மூலம் கிராமத் தொழில்களை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, சிறு மற்றும் குறு மத்திய தொழில் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் KVIC ஆனது வாழை நார் பிரித்தெடுப்பதற்கான இயந்திரங்கள் மற்றும் கருவி களை வழங்கும். இந்த திட்டத்தில் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் தொழில்நுட்ப உதவியை வழங்கும். இந்த பயிற்சியானது தலா 10 கைவினைஞர்கள் கொண்ட இரண்டு குழுக்களாக 12 நாட்கள் நடைபெறும். நிகழ்ச்சியின் முடிவில், ஒவ்வொரு குழுக்களுக்கும், புதிய வணிக முயற்சிகளுக்கு வசதியாக வாழை நார் பிரித்தெடுக்கும் இயந்திரம் வழங்கப்படும். திருச்சி தோட்டகலை துறை கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜே.சுரேஷ் சிறப்பு விருந்தினராகப் பங்கெடுத் தார். BN.சுரேஷ், மாநில இயக்குநர், KVIC, சென்னை மற்றும் R.வசி ராஜன், துணை இயக்குனர், KVIC, சென்னை தங்களின் சிறப்பு உரையில், KVIC மற்றும் கிராமோத் யோக் விகாஸ் யோஜனா (GVY) திட்டத்தின் முக்கிய சிறப்பம் சங்களை பற்றி எடுத்துரைத்தார்கள். கிராமப்புறங்களில் உள்ள தொழில்முனைவோர் மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தி, பிரதமரின்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை (PMEGP) பற்றி விரிவாகக் கூறினர். கைவினைஞர்களுக்கான எதிர்வரும் 12 நாள் பயிற்சித் திட்டத்தின் கட்டமைப்பு மற்றும் நோக்கங்கள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

முனைவர் இரா.செல்வராஜன், இயக்குனர், NRCB தனது தலைமை உரையில் வாழைத்தொழிலில் உள்ள மதிப்பு கூட்டபட்ட பொருட்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். வாழைத் தண்டு சாறு உற்பத்தி செய்தல் மற்றும் நார் பிரித்தெடுத்தல் போன்ற சிறு தொழில்களை ஊக்குவிப்பதன் அவசியத்தை பற்றி எடுத்துரைத்தார். தற்போதைய அரசின் திட்டங்கள் பெண்களுக்கு பொருளாதார வளர்ச்சி அடைவதற்கு பெரிதும் உதவுவதாகவும் அதை அவர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார். பங்கேற்பாளர்கள் தங்களுக்குள் சிறு குழுக்களை உருவாக்கி, பயிற்சித் திட்டத்தில் இருந்து கற்றுக்கொண்ட திறன்களைப் பயன்




படுத்தி வாழை நார் தயாரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். கூடுதலாக, இந்த முயற்சிகள் கிராமப்புறங்களில் தனிநபர்களுக்கு கணிசமான வருமான வாய்ப்புகளை வழங்க முடியும் என்று அவர் கூறினார். வாழை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மூலம் ஒரு ஹெக்டரில் இருந்து மொத்த வருமானம் 25 இலட்சம் வரக்கூடியது என்ற தகவலையும் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மொத்தம் 130 பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். கூடுதலாக, வாழை நார் பிரித்தெடுத்தல், வாழை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இயந்திரங்கள் குறித்த மூன்று தொழில்நுட்ப அமர்வுகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஐ.ரவி வரவேற்புரையாற்றினார், முதன்மை விஞ்ஞானி முனைவர் சி.கற்பகம் நன்றியுரை ஆற்றினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் தொழில்முனைவோர்கள் சந்திப்பு கூட்டம்

தேனி, அக்.24

தேனி மாவட்டம், சின்னமனூர், காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் தொழில்முனைவோர்கள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மையத்தின் சேர்மன் முனைவர் பெ.பச்சைமால் தலைமையாற்றி தொழில்முனைவோர்களுக்கான வேளாண் அறிவியல் மையத் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார்.



தேனி இந்திய அஞ்சல் பரிவர்த்தனை வங்கியின் மேலாளர் எ.மோகனசுந்தரம், சிறப்புரையாற்றி அஞ்சல் துறையின் திட்டங்கள் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார்.

ஜெ.அழகுராஜா, வளர்ச்சி அதிகாரி, அஞ்சல் துறை, தேனி, தபால் துறையில் தொழில்முனைவோர்கள் பயன்படும் வகையிலான திட்டங்கள் மற்றும் பொருட்களை பொட்டமிடுதல் பற்றி செயல்முறை விளக்கமளித்தார்.

மதுரை சிறு குறு நடுத்தர நிறுவனத்தின் எம்.எஸ்.எம்.இ-இசட் தரச்சான்றிதழ்கள் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் முத்துராஜா மற்றும் பிரியதர்ஸினி ஆகியோர்கள் இசட் தரச்சான்றிதழ்கள் திட்டங்கள் பற்றி விளக்கமளித்து, தேனி மாவட்டத்தைச் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு வெண்கலம் சான்றிதழ்கள் பெறுவதற் கான ஏற்பாடுகள் செய்தனர்.






வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யா சிவ செல்வி உணவுப்பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டல் பற்றிய தொழில்நுட்பங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார்.

தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டு பொருட்களை காட்சிப்படுத்தினார்கள்.

காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களாவது பாரம்பரிய அரிசி வகைகள், இளநீர் உடனடி பானக்கலவை, திராட்சை ஊறுகாய், திராட்சை விதை, தேநீர் பொடி, திராட்சை ஜெல்லி, திராட்சை ஜாம், எண்ணெய்கள், மாசாலப் பொடிகள், மூலிகைப் பொருட்கள், உடனடி ஊட்டச்சத்து கலவைகள், பழலெதர், நெல்லிப் பொருட்கள், சிறுதானியப் பொருட்கள் தேக்கு, தேங்காய் சிரட்சை மற்றும் வாழைநார்களிலிருந்து தயாரிக்கப் படும் கைவினைப்பொருட்கள்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 24.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 45 | 50 |
| 2 | வெண்டை | 45 | 48 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 37 | 40 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 40 | 46 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 85 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 35 | 42 |
| 6 | புடலை | 40 | 44 | 62 | நூல்கோல் | 32 | 38 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 30 | 34 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 20 | 24 |
| 9 | பாகற்காய் | 40 | 46 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 38 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 120 | 130 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 50 | 60 | 72 | குடமிளகாய் | 60 | 66 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 44 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 55 | 62 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 50 | 55 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 90 | 100 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 24 | 28 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 60 | 64 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 38 | 42 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 55 | 58 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# துவரை உற்பத்தியில் இருமடங்கு மகசூல் பெற 2% DAP கரைசல் தெளிப்பீர்!

கிருஷ்ணகிரி, அக்.24

கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சி.பச்சையப்பன் கூறியதாவது மாவட்டளவில் 20,000 ஏக்டர் பரப்பில் துவரை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பூக்கும் தருவாயில் உள்ளதால் 2% DAP கரைசல் தெளித்து இருமடங்கு உற்பத்தியை பெறுவீர். DAP கரைசல் 20 கி/லி அல்லது யூரியா 20 கி/லி பூக்கும் தருணத்தில் இலைத் தெளிப்பாக அளிக்க வேண்டும் மற்றும் 15 நாடகள் கழித்து மீண்டும் ஒரு முறை அளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதன் மூலம் பூ உதிர்வை தடுக்கிறது, அதிக காய்பிடிப்பதை ஊக்குவிப்பதோடு மகசூலையும் அதிகரித்து மும்மடங்கு வருமானத்தை ஈட்டி தருகிறது. எனவே துவரை பயிரிட்டுள்ள விவசாயிகள் அனைவரும் 2சதவீதம் டி.ஏ.பி கரைசலை பயன்படுத்தி அதிக மகசூலை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# வையம்பட்டி வட்டாரத்தில் செக்கணம் கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு பயிற்சி



திருச்சி, அக்.24

திருச்சி மாவட்டம், வையம்பட்டி வட்டாரத்தில் வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் செக்கணம் கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை துணை அலுவலர் ராஜா சந்திர மோகன் தலைமை தாங்கினார். அவர் கூறுகையில், நவம்பர் 15 தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளை அறிவுறுத்தினார். மேலும் நெல் மழை நீரில் இருந்து பாதிக்கப்பட்ட இளம் நெற் பயிர்களை காக்க இள மஞ்சள் நிறத்தில் காணப்படும் பயிர்களுக்கு இலைவழி 1 கிலோ ஜின்க் சல்பேட் 2 கிலோ யூரியா உரமிட வேண்டும். மேலும் 1 கிலோ சூடோமோனாஸ் மருந்தை 200 லிட்டர் தண்ணிரில் கலந்து 10 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளித்தால் வேண்டும் என்று கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

உதவி வேளாண்மை அலுவலர் செல்லப்பாண்டி, கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் ரவிவர்மா அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சிறுதானிய சாகுபடி முக்கியத்துவத்தை கூறினார். இயற்கை விவசாயி ஜோசப் ரெத்தினம், இயற்கை முறையில் வேளாண்மை பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் மாணிக்க பிரகாஷ் செய்திருந்தார்.




# விளைச்சலை மும்மடங்காக்க முளைப்புத்திறன் பரிசோதனை செய்வீர்!

திண்டுக்கல், அக்.24

விதைப்பரிசோதனை செய்து விதைத்தால் அதிக மகசூல் பெறலாம் என திண்டுக்கல் மாவட்ட விதைப்பரிசோதனை அலுவலர் ம.மகாலெட்சுமி, வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனாராணி ஆகியோர் தெரிவித்து உள்ளனர். இது குறித்து அவர் கூறியதாவது, விதை உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர் மற்றும் விவசாயிகள் அனைவரும் தங்களிடமுள்ள விதைகளின் தரத்தை அறிந்து விதைகளை விதைப்பதால் அதிக மகசூல் பெறலாம். குறைந்த தரம் கொண்ட விதைகளை நடவு செய்வதின் விளைவாக ஏற்படும் இடர்பாடுகளை குறைப்பதே விதை பரிசோதனை நிலையங்களின் நோக்கம் ஆகும்.

முளைப்புத்திறன் பரிசோதனையானது விதை முளைப்பிற்கு சாதகமான சூழ்நிலைகளான ஈரப்பதம், தட்பவெப்பநிலை, ஊடகம் மற்றும் ஒளிச்செறிவு போன்றவற்றில் மேற்கொள்ளப் படுகிறது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பராமரிக்கும் விதைகளின் முளைப்புத் திறனை இயல்பான நாற்றுகள், இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள் மற்றும் முளைக்காத விதைகள் என்று வகைபடுத்தப் படுகிறது. இயல்பான நாற்றுகள் என்பவை பயிருக்கு சாதகமான சூழ்நிலைகளான மணல், நீர், தட்பவெப்ப நிலை மற்றும் ஒளிச் செறிவில் நன்கு வளரும் நாற்றுக்கள், சாதகமான சூழ்நிலையில் நன்கு வளராமல் வளர்ச்சி குன்றியும், அழுகியும் காணப்படும் நாற்றுகள் இயல்பற்ற நாற்றுகள் ஆகும். கடின விதைகள் ஆய்வுக் காலம் முடியும் வரை ஈரத்தை உறிஞ்சாமல் கடினமாக காணப்படும்.

முதல் ஆய்வில் முடிவுகள் திருப்பதிகரமாக இல்லாவிடில் அவற்றின் முடிவு வெளியிடப்படாமல் வைத்திருந்து பின்னர் மறு ஆய்வு செய்யப்பட்டு இறுதிமுடிவு அறிவிக்கப்படும். முடிவானது 100 விதைகளுக்கு எத்தனை விதைகள் இயல்பான, இயல்பற்ற, கடின மற்றும் முளைக்காத விதைகள் என அறிவிக்கப்படும்.

எனவே திண்டுக்கல் மாவட்ட விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் வசம் உள்ள விதைகளில் 100 கிராம் அளவு விதையினை திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் பயிர் இரகம், முழு முகவரியுடன், ஒரு விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- மட்டும் பரிசோதனை கட்டணமாக செலுத்தி பரிசோதிக்கலாம் என தெரிவித்துள்ளனர்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771

# திருச்சுழி வட்டாரத்தில் ஜிங்க் சல்பேட் மானிய விலையில் பெற விவசாயிகளுக்கு வேளாண்துறை அழைப்பு

விருதுநகர், அக்.24

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்தில் மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஜிங்க் சல்பேட் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது என திருச்சுழி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திருச்சுழி வட்டாரத்தில் நடப்பு ஆண்டு சம்பா பருவத்தில் நெற்பயிர் 3000 ஹெக்டர் வரை சாகுபடி பரப்பு எதிர்பார்க்கப்படுகிறது. தழை, மணி, சாம்பல், இரும்பு, துத்தநாகம், காப்பர், மாங்கனீசு, ஆகியவை நெற்பயிருக்குஅடிப்படையாக தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் ஆகும். நெற்பயிர் மண்ணில் உள்ள தழைச்சத்தினை சரியாக உறிஞ்சி எடுக்கவும், அதன் பயன்பாட்டுத்திறன் அதிகரிக் கவும், துத்தநாக சத்து மிகவும் அவசியம். பயிர்கள் நன்கு வளர்ச்சியடையவும், அதிக தூர்கட்டவும், நெற்கதிர்களில் பால் பிடிக்கும் திறன் மற்றும் கருவுறுதல் சரியாக நடைபெறவும் துத்தநாக சத்து முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரே நிலத்தில் தொடர்ச்சியாக நெற்பயிர் சாகுபடி செய்வதால் நிலத்தில் எப்போதும் நீர் தேங்கி கரையா உப்புக்கள் அளவு அதிகரித்து துத்தநாகச்சத்து குறை பாட்டை ஏற்படுத்துகின்றது. மண்ணில் சுண்ணாம்புத் தன்மை அதிகம் இருந்தால் துத்தநாகச்சத்து பயிருக்கு கிடைக்க இயலா நிலை ஏற்படுகின்றது. பயிர் வளர்ச்சி குன்றி, இளம் இலைகள் மஞ்சள் நிற கோடுகள் கொண்டதாக காணப்படும். பின்னர் காய்ந்து விடும். துத்தநாகச்சத்து குறைபாடு இருந்தால் நரம்பினை ஒட்டிய பகுதிகள் வெண்மை நிறக்கோடுகள் உருவாகி இலைகள் வெளுத்து காணப்படும். இலைத்தாளின் அகலம் குறைந்து சிறுத்து காணப்படும். பயிர்களின் வளர்ச்சி குறைந்து குட்டையாக காணப்படும். நெற்கதிர் தூர்கள் பிடிக்கும் பருவத்தில் தூர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுவதோடு மலட்டுத்தன்மையுடன் காணப்படும், விளைச்சல் குறைவு ஏற்படும். ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ ஜிங்சல்பேட் இட்டு பயிரில் துத்தநாகச்சத்து பற்றாக்குறை ஏற்படின் அதனை நிவர்த்தி செய்து பயிரின் மகசூல் 10 முதல் 15 சதவீதம் கூடுதலாக பெற இயலும்.

தற்போது திருச்சுழி வட்டாரத்தில் ஜிங்சல்பேட் கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் மானியம் என்ற வீதத்தில் ஒரு நபருக்கு 10 கிலோ முழுவிலை ரூ.690ல் ரூ.250 மானியம் நீங்கலாக ரூ.441 மட்டும் செலுத்தி பெற்றுக்கொள்ளாம் என திருச்சுழி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ம.காயத்ரிதேவி தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# லாபம் தரும் மண்புழு உர தயாரிப்பு பற்றி தெரியுமா?



தற்போது நகர்ப்புறங்களில் வீட்டு தோட்டம் மற்றும் மாடித்தோட்டத்திற்கு மண்புழு உரத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பது நாம் அறிந்தே. இதனால் அவற்றை உற்பத்தி செய்ய விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். அதனை எப்படி உற்பத்தி செய்வது என்று பலருக்கு தெரியாத நிலை தான். இந்நிலையில், வேளாண் அறிவியல் மையங்களில் கூட இதற்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் இந்த மண்புழு உர உற்பத்தியில் ஈடுபட்டால் கூடுதலான லாபம் மட்டுமல்ல. பண்ணை கழிவுகளையும், பயனுள்ளதாக மாற்ற முடியும் என்று நினைக்கும் போது வியப்பாக இருக்கிறதல்லவா?.

**மண்புழு தயாரிக்க ஏற்ற மண்புழுக்கள் எது தெரியுமா?**

இந்தியாவில் 350 இன மண்புழுக்கள் உள்ளன என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. மண்புழுக்களில் ஈசினியா பிட்டிடா, யூர்டிலஸ் யுஜினியே, பைரினாக்ஸ் எக்ஸ்கவேட்டியல், இவை இயற்கை கழிவுகளை உரமாக மாற்ற பயன்படுத்த படுகிறது. இந்த புழுக்கள் தென்னை நார் கழிவு முதல் சமை யலறை கழிவுகள் வரை அனைத்து வகையான பொருட் களையும் மண்புழு உரமாக மாற்ற வல்லது.

**மண்புழு படுக்கைகள் தயாரிப்பது எப்படி?**

மண்புழு உரம் தயாரிக்க வேளாண் கழிவுகள் (இலை தழை) மற்றும் மாட்டு சாணம் ஆகியவற்றை 1.5 மீட்டர் அகலமும் 1 மீட்டர் உயர படுக்கையாக தேவையான நீளம் பரப்பி மட்க செய்யலாம். ஒரு மீட்டர் உயரத்தில் ஆன இரண்டு படுக்கை அடுக்குகளுக்கு இடையே 300 மண்புழுக்களை இடலாம். 40-50% ஈரப்பதத்தில் அதனுடைய வெப்பம் 20-30 டிகிரி செல்சியஸ் மேல் அதிகரிக்காமல் தண்ணீர் தெளித்து பராமரிக்க வேண்டும். மண்புழுக்கள் தீவிரமாக தீவனத்தை உட் கொள்ளும் ஆற்றல் இருப்பதால் அவை கழிவுகளை எளிதில் கிரகித்து மண்புழு உரமாக மாற்றி விடும்.

**மண்புழுக்கள் படுக்கைகள்**

75 செ.மீ முதல் 90 செ.மீ தடிமனாக இருப்பது அவசியம். இதனால் வடிகால் வசதிக்கும் ஏதுவாகும். மண்புழு படுக்கைகள் நிலத்தின் மேற்பரப்பில் இருக்குமாறு அமைக்க வேண்டும்.

**மண்புழு உர அறுவடை**

மண்புழுவின் படுக்கையின் மேலே உள்ள மண்புழுவின் கழிவுகளை வாரத்திற்கு ஒரு முறை அறுவடைசெய்ய வேண்டும். கையால் மண்புழு கழிவினை சேகரித்து நிழலில் குவித்து வைக்க வேண்டும். இந்த அறுவடையானது மண்புழு தெரியும் இடம் வரை செய்ய வேண்டும்.

**மண்புழு உரசத்துகளின் அளவு தெரியுமா?**

மண்புழுவில் கரிமசத்து 9.5% முதல் 12% வரை உள்ளது. அத்துடன் குறைந்த அளவில் 0.5- 1% தழை மணி சாம்பல் சத்துகளும், இதர சத்துகளும் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

**மண்புழு உரத்தின் நன்மைகள்?**

1) மற்ற மக்கிய உரங்களை விட மண்புழுக்கள் உரத்தில் சத்துகள் அதிகம்.

2) மண்புழு உரத்தில் நன்மை தரும் நுண்ணுயிர்கள் அதிகமாக இருக்கும். இவை மண்ணில் இடும் போது பயிர்களுக்கு நுண்ணூட்ட சத்துகளை மண்ணிலிருந்து எடுத்துக் கொடுக்க உதவுகின்றன.

3) திடக் கழிவுகளில் ஏதேனும் நச்சுத்தன்மை கொண்ட பொருட்கள் இருந்தால் அவை மண்புழு வயிற்றுக்குள் செல்லும் போது நச்சு மாறி நல்ல பொருளாக வந்து சேர்கிறது.

4) கரையாமல் இருக்கும் மணிசத்தை கரைத்து கொடுக்க உதவுகின்றன.

5) மண்புழு உரம் எளிதாக குறைந்த விலையில் (மாட்டு சாண த்திற்கு மாற்றாக) பயன்படுத்தப்படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



வேலூர், அக்.24

வேலூர், அத்தித்தாங்கல் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இப்கோ, கள அதிகாரி, சக்திவேல், பல்வேறு பயிர்களில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா மற்றும் இதர உரங்கள் பயன்படுத்தும் முறை மற்றும் நானோ உரங்கள் பயன்படுத்து வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும், இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண் மாசுபடும் மற்றும் மண்வளம் குறையும் என்றும் மண் வளத்தை காக்க நானோ உரங்களை பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார். குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்கவும். இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்த வலியுறுத்திர். நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் எனக் கூறினார். பின்னர், இந்திய அரசின் தூய்மை இந்தியா பிரச்சாரத்தின் கொள்கைகளை விளக்கினார்.



# காரீப் பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்ய அழைப்பு

கிருஷ்ணகிரி, அக்.24

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் 2024-25 காரீப் மற்றும் ராபி பருவ பயிரான நெல்லுக்கு காப்பீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பயிரைக் காப்பீடு செய்ய அக்டோபர் 30ம் தேதி கடைசி நாளாகும்.

இது தொடர்பாக தளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தளி வட்டாரத்தில் காரீப் மற்றும் ராபி பருவ சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டு 2024-25 காரீப் பருவத்திற்கான நெல் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காப்பீடு செய்யலாம். அறிவிக்கப்பட்ட பயிர்களில் குத்தகையில் சாகுபடி செய்யும் விவசாயிகளும் பயன் பெற தகுதியானவர்கள் ஆவர். விவசாயிகள் உட்பட அனைத்து பயிர் கடன் பெறும் விவசாயிகளும் இதில் சேர்த்து கொள்ளப்படுவர். விதைப்பு தவிர்த்தல், விதைப்பு தோல்வி யுறுதல், பயிரிட அபாயம் ஏற்படும் சூழ்நிலையில், விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் பயிர் இழப்பு அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் பயிர் இழப்பு அறுவடைக்கு பின் ஏற்படும் மகசூல் இழப்பு, புயல், ஆழங்கட்டி மழை, மண் சரிவு,வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளில் ஏற்படும் பயிர் இழப்பு ஆகியவற்றிற்கு காப்பீடு வழங்கப்படுகிறது. பயிர் காப்பீடு செய்ய முன்மொழிவுப டிவம், சிட்டா, அடங்கல் அல்லது பயிர் சாகுபடி சான்று, ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தக முன் பக்க நகல் ஆகிய ஆவணங்கள் தேவைப்படுகிறது. மேலும் பயிர் காப்பீடு தொகை, பிரீமியம் தொகை மற்றும் காலக்கெடு குறித்து விவரம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன்படி பிரீமியம் தொகை நெல் ரூ.556/- ஆகும். நெல் பயிருக்கு அக்டோபர்-30ம் தேதி வரை பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, காரீப் பருவ பயிர்களை சாகுபடி செய்துள்ள அஞ்செட்டி பகுதிக்கு உட்பட்ட விவசாயிகள் இத்திட்டத்தில் பெருமளவில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield · Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield · Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# செங்கமலபட்டி கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி



விருதுநகர், அக்.24

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப் பட்டுள்ள செங்கமலபட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழு உறுப்பினர்களுக்கு ராபி பருவகால தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது.

இது குறித்து சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சிவகாசி வட்டாரத்தில் 2024-25ம் நிதியாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள செங்கமலபட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராம வேளாண் முன்னேற்றக்குழு உறுப்பினர்களுக்கு ராபி பருவத்திற்கான தொழில்நுட்ப பயிற்சியானது 24.10.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு சிவகாசி, வேளாண்மை அலுவலர் இரா.சுமதி தலைமையேற்று வேளாண்மைத்துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இனங்கள் பற்றியும், வேளாண்மைத்துறை மூலம் மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருட்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். விருதுநகர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் அரிபுத்திரன் கலந்து கொண்டு விதை நேர்த்தி தொழில் நுட்பங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான மெட்டாரை சியம், என்.பி.வி, டி.விரிடி, சூடோமோனாஸ், ஆகியவற்றின் பயன்கள் பற்றியும், உயிர் உரங்கள் பற்றியும், நெற்பயிரில் வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். கிள்ளிகுளம், வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி மாணவர் தூண்டிகாளை கலந்து கொண்டு மண்வள மேலாண்மை, மண்மாதிரிகள் எடுக்கும் முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த உர மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். பயிற்சியின் இறுதியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் நிவேதா ஓசியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சந்தன லட்சுமி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERALS
• 100% LEAD FREE PIPE
• ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
• 25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
• 20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
• PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771

# மானாவாரியில் தொழில் நுட்பம் மூலம் எள் சாகுபடியில் மகசூல் அதிகரிக்கலாம்



வறட்சியை தாங்கி வளரக்கூடிய குறுகிய கால மானாவாரி எள் சாகுபடிக்கு தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலமாக மகசூலை அதிகரிக்க முடியும் என விதை பரிசோதனை அலுவலர் ம.மகாலட்சுமி தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டதில் எள் பயிரானது, கார்திகைப் பட்டம் மாசிப் பட்டம் என இரண்டு பட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மானா வாரியாக அதிகமான பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்படுவதால் உற்பத்தியும் உற்பத்தித்திறனும் குறைவாக உள்ளது. இதனை சரி செய்ய புதிய தொழில்நுட்பங்களை கையாள வேண்டும். மானா வாரியில் எள் சாகுபடி வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய குறுகிய கால ரகங்களான, டிஎம்.வி.3, 4, 5, 6, டிஎம்வி (எஸ்.வி)7, வி.ஆர்.ஐ (எஸ்வி) 1, கோ 1 ரகங்களை பயிரிடலாம். தேர்வு செய்யப்படும் எள் ரகங்களுக்கு இனத் தூய்மை இன்றியமையாதது.

இனத்தூய்மை இல்லாமல் பயிரிடும் பொழுது பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகமாகி பயிர் பாதிகப்படுகின்றன. இதை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசித்தை விதையுடன் கலந்து பாலிதீன் பையில் போட்டு 24 மணிநேரம் வைத்து, பின்னர் அசோஸ் பைரில்லம் என்னும் நுண்ணுயிர் கலவையை 200 மிலி ஆறிய வடிகஞ்சியுடன் கலந்து 30 நிமிடம் நிழலில் உலர்த்தி விதைக்கவும். பொதுப்பரிந்துரைப்படி ஹெக்டேருக்கு 23 கிலோ தழைச் சத்து, 13 கிலோ மணிச்சத்து, 13 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரமாக முழு அளவவையும் விதைக்கும் முன் தூவ வேண்டும். இது தவிர நிலத்தின் தன்மைக்கு ஏற்ப 5 கிலோ மாங்கனீஸ் சல்பேட் 15 கிலோ மணலுடன் கலந்து தூவ வேண்டும். இதனால் காய்கள் ஒரே சமயத்தில் திரட்சியாக முதிர்வதற்கு வழி செய்கிறது.

விதைத்த மூன்றாம் நாள் அலக்குலர் என்ற களைக்கொல்லியை 1 ஹெக்டேருக்கு 20 கிலோ என்றளவில் மணல் கலந்து தூவினால் சாரணை போன்ற களை கட்டுப்படுத்தலாம். விதைத்த 15 மற்றும் 35ம் நாள் இரண்டு தடவை களை எடுக்க வேண்டும். மானா வாரியில் சாகுபடியில் விதைத்த 25ம் நாளில் இருந்து கொண்டைப் புழு தாக்குதலால், செடியின் நுனிப்பகுதியில் உள்ள இலைகள் சேர்த்து வளைப்போல பின்னிக் கொள்ளும்.

இதனால் இளம் மொட்டுகளும், பூக்களும் சேதமடைகின்றன. இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 கிராம் கார்பரிலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 25, 35 மற்றும் 50ம் நாளில் தாக்குதலை கணக்கிட்டு தெளிக்கவேண்டும்.

பூவிதழ் நோய் தென்பட்டால் நோயை பரப்பும் இலைத்தத்துப் பூச்சியை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 மிலி மிதைல்டெமடான் அல்லது 800 குயினால் பாஸ் மருந்து தெளிக்கவும். இவ்வாறாக மானாவாரிக்கு ஏற்ற இனத்தூய்மை பெற்ற விதைகளை பயிரிட வேண்டும். மேலும், உரிய முறையில் உரமிட்டு தேவையான பயிர் பாதுகாப்பு செய்தால் காலத்தில் அறுவடை செய்து நல்ல விளைசலை விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

தங்கள் விதைக்கும் விதையினை பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலை யத்தில் ரூ.80/-கட்டணமாக செலுத்தி விதைப்பரிசோதனை செய்து விதைக்குமாறு விதைப்பரிசோதனை அலுவலர் மகாலட்சுமி மற்றும் வேளாண்மை அலுவலர் முருகேஸ்வரி கேட்டுக்கொண்டனர்.



# மணப்பாறை அருகே தொப்பம்பட்டியில் கிராம வேளாண் முன்னேற்ற குழு கூட்டம்

திருச்சி, அக்.24

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை கீழ் 2024-25ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தொப்பம்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு கூட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான ராபி பருவத்திற்கான பயிற்சியானது நடைபெற்றது. மணப்பாறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மோகனா தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் கண்ணன் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தினை திட்டத்தின் சிறப்பு கூறுகளை விரிவாக எடுத்துரைத்தனர். மண்புழு வளர்ப்பு மானியத்தில் வழங்கப்படும். அதனை வளர்ப்பு முறைகள், உழவன் செயலின் பயன்பாடுகள் மற்றும் தமிழ் மண் வளம் பற்றியும் மணப் பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் பயன்பாடு அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் விரிவாக எடுத்துரைத் தனர். ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தினை விரிவாக விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் சிவகுமார் பயிர் இடுவதின் மூன் மண் பரிசோதனை மற்றும் பாசனநீர் பரிசோதனை செய்வதின் அவசியம் பற்றியும் மற்றும் மண்வள அட்டை அடிப் படையில் உரம் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறினார். வேளாண்மைத் துறையில் மத்திய மற்றும் மாநில திட்டங் களில் உள்ளமானியங்கள், பேட்டரி தெளிப்பான், வரப்பு பயிர் இடுவதின் அவசியம், ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும் எடுத் துரைத்தனர். உதவி வேளாண்மை அலுவலர் சரண்யா ஒருங் கிணைந்த பண்ணையம் திட்டத்தில் வழங்கப்படும் பழ கன்றுகள் மற்றும் மானியத்தில் வழங்க உள்ள இடுபொருள் பற்றியும் நெல் மற்றும் இதர பயிர்களுக்கு தேவைப்படும் நுண்ணூட்ட உரங்கள் மானிய விலையில் மணப்பாறை வேளாண்மை விரிவாக்க மையத் தில் வழங்கப்படும் என்பதை கூறினார். அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் சத்தியசீலன் திட்ட செயல்பாடுகள் கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம், விவசாயிகள் பயிற்சி பற்றி விளக்கி கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரியங்கா பேசுகையில் பாரத பிரதமரின் விவசாயிகளின் கௌரவ நிதி திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகள் அனைவரும் தங்களது விவரங்களை அருகிலுள்ள இ-சேவை மையத்தில் புதுப்பித்மூக் கொள்ள கேட்டு கொண்டு நன்றி உரை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உழவர் நண்பர் ராமசாமி செய்திருந்தார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நித்ய கல்யாணி சாகுபடி, பரவலாக்கம் மற்றும் சந்தைப்படுத்துதல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்



விருதுநகர், அக்.24

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, மண்டல ஆராய்ச்சி நிலையம், வேளாண் தொழில் ஊக்குவிப்பு மையம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி மற்றும் தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், சென்னை இணைந்து நித்திய கல்யாணி சாகுபடி மற்றும் பரவலாக்கம் பற்றிய ஒரு நாள் விழிப்புணர்வு கருத்தரங்கம் அருப்புகோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் முனைவர் செல்விரமேஷ், பேராசிரியர் மற்றும் தலைவர், மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புகோட்டை வரவேற் புரையாற்றினார். இக்கருத்தரங்கில் நித்திய கல்யாணி சாகுபடி செய் வதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கும் யுத்திகளை முனைவர் சொ.வன்னியராஜன், முதன்மையர், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி, நித்திய கல்யாணி பராமரிப்பு அதிகம் தேவைப்படாத, இரட்டிப்பு வருமானம் தரக்கூடிய வறண்ட நிலத்திற்கு ஏற்ற பயிர் என்று அதன் சிறப்பியல்புகளை எடுத்துரைத்தார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர், முனைவர் வீ.ப.ஜெயசீலன், மாவட் டத்தில் நித்திய கல்யாணி சாகுபடிகான வாய்ப்புகள் பற்றியும், நித்திய கல்யாணியை சாகுபடி செய்ய முன்னோடி விவசாயிகள் உழவர் உற்பத்திக்குழு அமைத்து அதன் உற்பத்தியை மேம்படுத்த வேண்டும் என்று சிறப்புரையாற்றினார். முனைவர் வெ.கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம் புத்தூர், இணையவழி மூலம் தலைமையேற்று நித்திய கல்யாணியின் பல்வேறு மருத்துவ குணங்களைப் பற்றியும், நித்திய கல்யாணியில் விவசாயிகளின் நன்மைக்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தலைமையுரையில் எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் நித்திய கல்யாணி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பல்கலைக் கழக பேராசிரியர்கள் முனைவர் வி.பூ.சாந்தி, இணை பேராசிரியர், (தோட்டக்கலை) முனைவர் ப.பாலசுப்ரமணியன், (தோட்டக்கலை), ஆகியோர் எடுத்துரைத்தனர். மேலும் இவ்விழாவில் தோட்டக்கலை இணை இயக்குனர் சூ.சுபாவாசகி, மாவட்ட ஆட்சியரின் நேரடி உதவி யாளர் (வேளாண்மை) நாச்சியார் மற்றும் இணை இயக்குனர் (வேளாண் விற்பனை மற்றும் சந்தைபடுத்துதல்), ரமேஷ் ஆகி யோர்கள் கலந்து கொண்டு நித்திய கல்யாணி சாகுபடி செய்வதற்கு

தேவையான அரசு தரப்பு மானியங்கள் மற்றும் பயிர்க் கடன் குறித்து எடுத்துரைத்தார்கள். திருச்சி வேளாண் அடைக்காப்பு மையத்திலிருந்து விக்னேஷ் பிரபு கலந்து கொண்டு தன்னுடைய நிறுவனத்தில் சேவைகள் குறித்து விளக்கினர். மேலும், கடல்வழி மற்றும் ஆகாயவழி ஏற்றுமதிக்கு தயார்படுத்துதல் தொடர்பான தகவல்களை தி. ரமேஷ், துணை போக்குவரத்து மேலாளர், வ.ஊ.சி. துறைமுகம், தூத்துக்குடி, முனைவர் வி.பி.ஸ்ரீஹர்சா, பயிர் பாது காப்பு அலுவலர், விமான நிலையம், மதுரை தெளிவாக எடுத் துரைத்தார். தொடர்ந்து விவசாயிகள், கொள்முதல் செய்வோர், ஏற்றுமதியாளர்கள், சகோதரத்துறை மற்றும் நபார்டு அலுவலர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை பரிமாற்றம் செய்து கொண் டனர். இந்நிகழ்ச்சியின் நிறைவாக முனைவர் இரா.அகிலா, இணை பேராசிரியர் (பயிர் நோயியல்) நன்றியுரையாற்றினர்.




# நெற்பயிரைத் தாக்கும் தானிய நிறமாற்ற நோய்

**தாக்குதலின் அறிகுறிகள்**

● அறுவடைக்கு முன்னும் பின்னும் பல்வேறு உயிரினங்களால் தானியங்கள் பாதிக்கபடலாம். இதனால் நிறமாற்றம் ஏற்படலாம். இதன் தாக்கம் பருவம் மற்றும் இருப்பிடத்தைப் பொறுத்து மாறுபடும்.

● தொற்று வெளிபுறமாகவோ அல்லது உட்புறமாகவோ இருக்கலாம். தானியங்களில் அடர் பழுப்பு அல்லது கருப்பு புள்ளிகள் தோன்றும்.

● சம்பந்தப்பட்ட உயிரினம் மற்றும் நோய்த் தொற்றின் அளவைப் பொறுத்து நிறமாற்றம் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, இளஞ்சிகப்பு அல்லது கருப்பு நிறமாக இருக்கலாம்.

● இந்த நோய் தரமான தானியங்களின் இழப்புக்கு காரணமாகும்.

**நோய் பரவலுக்கு ஏற்ற காரணிகள்**

● கதிர் வெளிவந்த நிலையின் போது அதிக ஈரப்பதம் மற்றும் மேகமூட்டமான வானிலை.

**மேலாண்மை**

● 50% பூக்கும் பருவத்தில் கார்பன்டசிம் + திரம் + மான்கோசெப் 1:1:1 @ 0.2% (அல்லது) டெபுகோனசால் 50% + டிரைப்ளோக்ஸிரோபின் 25% WG @ 200 கிராம்/எக்டர் (அல்லது) வேப்பெண்ணெய் @ 3 % இலைவழித் தெளிப்பாக தெளிப்பு செய்ய வேண்டும்.

● இலையுறை கருகல் மற்றும் தானிய நிறமாற்றதைக் கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டைலிஸ் 10 கிராம்/கிலோ கொண்டு விதை நேர்த்தி, அசாக்ஸிரோபின் @ 100 மி.லி/ஏக்கருக்கு இலைவழித் தெளிப்பாக 50% பூக்கும் பருவத்தில் தெளிப்பு செய்ய வேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அதிக மகசூல் பெற தரமான விதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும்

அதிக மகசூல் பெற தரமான விதைகளை விவசாயிகள் தேர்ந்தெடுக்க வேண்டும் என திருப்பூர் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் அறிவுறுத்துகின்றார்.

## தரமான விதை

விவசாயத்தின் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை. தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதை பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிற ரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படு கின்றன. முளைப்புத் திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத் திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதை மாதிரிக்கும் இயல்பான நாற்றுகள், இயல்பற்றவை, கடினமான விதைகள் மற்றும் உயிரற்ற விதைகள் போன்றவை கண்டறியப் பட்டு முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்படுகிறது. முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். வலுவற்ற நாற்றுகள் அல்லது வலுவற்ற பயிர்களை கண்டறிந்து தரமான விதையினை உறுதி செய்து இடுபொருள் செலவினை குறைத்து அதிக மகசூல் பெற விதை பரிசோதனை அவசியமாகும்.

## வலுவற்ற நாற்றுகள்

வலுவற்ற நாற்றுகள் மீண்டும் வளருமா? மற்ற நல்ல நாற்றுக் களை போன்று பலன் தருமா? என்ற ஐயம் அனைவரிடமும் உள்ளது. ஆனால் இந்த வலுவற்ற நாற்றுகளால் இயல்பான நாற்றுகளை போல வளர்ந்து பயன் தரமுடியாது. ஏனெனில் இயல் பான வளர்ச்சியை தரச்சுடிய முக்கிய பாகங்களான வேர் தண்டு அல்லது வளர் நுனி இவற்றில் ஏதேனும் ஒன்றில் பழுது, குறைபாடு, முழு வளர்ச்சியின்மை, வேர், தண்டு மற்றும் வளர்ச்சிக்கான முக்கியமான சில பகுதிகள் இல்லாமல் போவதன் காரணமாக நாற்றுகளின் வளர்ச்சி தடைபடுகிறது. விதையுறைகள் பழுது, நாற்று களின் மேல் பகுதி அல்லது நாற்று முழுவதிலும் உள்ள குழிகள், பிளவுகள், வெடிப்புகள் பூச்சு தாக்குதலுக்குள்ளாவதால் ஏற்படும் காயங்கள், வித்திலைகள் மற்றும் நுனி மொட்டு பாதிப்படைதல், நாற்றுகளின் முக்கிய பாகங்களான வேர், தண்டு, நுனிமொட்டு ஆகி யவை வலுவற்றும் சரியான நீள் விகிதத்தில் இல்லாமல் இருத்தல்,

வேர் நன்றாக வளர்ந்து தண்டு பகுதி வளர்ச்சி குறைந்தும் காணப்படுதல் முதல் நிலை அல்லது இரண்டாம் நிலை வேர் வளர்ச்சி குறைந்து காணப்படுதல் போன்றவை வலுவற்ற நாற்றுகள் என அழைக்கப்படுகிறது.

**பூச்சுக் கொல்லி மருந்துகள்**

வலுவற்ற நாற்றுகள் உருவாக சில காரணங்கள் உள்ளன. முதிர்ச்சியற்ற விதைகளை விதைப்புக்கு பயன்படுத்துதல், முறையாக விதைகளை சேமித்து பயன்படுத்தாமை, விதையினை சேமிக்கும் போதோ அல்லது பயன்டுத்தும்போதோ முக்கிய பாகங்களான விதையின் கரு, உணவு முதலியன பாதிக்கப்படுவதாலும், விதையானது பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு ஆளாவதாலும், எந்திரங்களை பயன்படுத்தி விதைகளை அறுவடை செய்தல், தூற்றுதல், தூய்மைப்படுத்துதல், விதைகளை ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு கொண்டு செல்லும் போது வெப்ப நிலை அதிகரிப்பதாலும், பூச்சி நோய் தாக்கத்திற்கு உள்ளாக்கும் விதைகளை பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கொண்டு அழிக்கும் போதும் இதுபோன்று விதைகள் பாதிப்படைந்து வலுவற்ற நாற்றுக்களை உருவாக்குகிறது.

**விதைப்பரிசோதனை**

எனவே, திருப்பூர் மாவட்ட விவாயிகள் அதிக மகசூல் பெற்று லாபம் பெறவும், விதை இடுபொருள் செலவினங்களைக் குறைக்கவும் தங்களிடமுள்ள விதைகளை திருப்பூர், பல்லடம், திருநகர் காலனி, முதல் தளம், அறை எண். 328/1-ல் இயங்கும் விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- மட்டும் பரிசோதனை கட்டணமான செலுத்தி, பரிசோதனை செய்து வலுவான மற்றும் வலுவற்ற விதைகள், உயிரற்ற விதைகள் எவ்வளவு உள்ளது என அறிந்து விதைக்கவும். அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து விதையின் ஈரப்பதத்தை அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறு திருப்பூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜோ.வளர்மதி மற்றும் வேளாண் அலுவலர் கு.கிருஷ்ணபிரியா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

